1970 மார்ச் 11]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தத் தண்ணீரைக் கெடாத அளவுக்கு என்ன முறையில் செய்யலாம் என்பது ஆராயப் பட்டு வருகிறது. கழிவு நீரினால் இந்த இரண்டு ஊர்க் கிணறுகள் பாதிக்கப்பட்டிருப்பதனால் இங்குள்ளவர்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் பொறுப்பை இந்தக் கம்பெனிகள் ஏற்றுக்கொண்டிருக் கின்றன. தண்ணீரை இலவசமாகக் கொடுக்க கம்பெனி உரிமை யாளர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அதை உயர்நிலைத் தொட்டிக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கப் பொறுப்பு ஏற்கப் பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்த 4½ லட்சம் ரூபாய்க்கான திட்டம் எப்போது நடைமுறைக்கு வந்து முடிவுறும்? இந்தத் தொழிற்சாலையில் இருந்து வருகிற கழிவு நீரினால் 78-க்கு மேல் விவ சாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவசாயி களுக்கு நஷ்டஈடு அளிக்கப்படுமா ? அவர்கள் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு என்ன மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 10 ஊர்களுக்குக் குடி தண்ணீர் திட்டத்திற்காக 4½ லட்சம் ரூபாயில் திட்டம் தயாரித்து தலைமைப் பொறியாளர் அனுப்பியிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பாசனக் கிணறுகள் பாதிக்கப் பட்டிருப்பது சம்பந்தமாகத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

Rent free quarters for women teachers.

* 312 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Tamil Nadu Government have sanctioned a sum of Rupees five lakhs for the construction of rent-free quarters for women teachers in rural areas during 1969-70 ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கே. விநாயகம் : பெண் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? எந்த எந்த ஊர்களில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் செலவழிக்கப்படாமல் இருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எந்த எந்த ஊர் களில் கட்டப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் இல்லை. 1968-69-ல் 1,300 இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ல் ரூ. 5 லட்சம் செலவழிக்கப் பட்டிருக்கிறது. 1970-71-க்கு ரூ. 5 லட்சம் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது.

[1970 மார்ச் 11

திரு. என். மருதாசலம் : பெண் ஆசிரியர்களுக்கு எந்த எந்த ஜில்லாக்களில் எவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மொத்தத்தில் 1,300 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இடத்தில் எவ்வளவு என்கிற விவரம் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : ஒரு பெண் ஆசிரியருக்கு ஒரு வீடு என்று கட்டிக்கொடுக்கப்படுவதினால் தனியாக அங்கே ஒரு பெண் ஆசிரியர் குடியேற பயப்படுகிறார். ஒரு வீடு இரண்டு பேர்களுக்கு என்கிற அடிப்படையில் ப்ளான் அமைத்துக் கட்டிக் கொடுக்க வகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறபோது 1,300 வீடுகளே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிதி வசதி ஏற்படுகிறபோது நல்ல முறையில் இது கவனித்து செயல்படுத்தப்படும்.

மாவட்டங்களில் கண் மருத்துவ மனைகள்

* 313 வினா.—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் தனியாக ஒரு கண் ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) கண் டாக்டர்களின் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் 'Diploma in Ophthalmology' போன்ற பட்டப்படிப்பு வகுப்புகளை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி இவைகளில் 6 இடங்கள் வீதம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் 'Diplomo in Ophthalmology' வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்தக் காலத்தில் கண் சம்பந்தப் பட்ட வியாதிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால்—மாவட்ட தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரிகளிலாவது தனி டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி கண் வைத்தியர்களைப் போட ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் கண் மருத்துவ மனை இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால், தலைநகர ஆஸ்பத்திரி ஒவ்வொன்றிலும் இப்போதே தனி கண் வைத்தியப் பிரிவு இருக்கிறது, டாக்டர்கள் தனியாக இருக்கிறார்கள். சென்னையில் மட்டும் தான் தனியாகவே கண் மருத்துவ மனை இருக்கிறது.